ஸ்ரீ தந்வந்த்ரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.


ஸௌமிய
தை

FEBRUARY
1970





தொகுதி 32
பகுதி 2

Vol.
No. 2


ஆசிரியர் :
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S ராம சர்மா,

பிரசுரகர்த்தா :
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.


வருஷச் சந்தா
ரூ.5/-

Annual
Subscrip tion
Rs. 5/-



| | |
|---|---|
| சுடுகிற பழமா ? சுடாத பழமா ? | 47 |
| உலக சுகாதாரத்திற்கு ஆயுர்வேதத்தின் உதவி | 49 |
| தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலம் | 54 |
| மகாநாட்டிற்கு வாழ்த்துச் செய்திகள் | 56 |
| வல்மீகார்புதங்களும் புற்றுநோயும் | 58 |



காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

# வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

## கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

*ஸ்தாபிதம்: 1902.*

Registered Trade Mark.

THE ARYA VAIDYA SALA KOTTAKAL

**தலைமை ஆபீஸ் போன்; கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்**

தலைமை அலுவலகம், (மானேஜிங் டிரஸ்டி-மானேஜருடன் தொடர்புள்ளது.) போன் எண் 31

நர்ஸிங்ஹோம் (போன்) 44
பிரதான வைத்யர் (போன் 25)
மானேஜிங் டிரஸ்டி (வீடு) (போன் 27)
மானேஜர் (வீடு) (போன் 26)

**சென்னை கிளை:**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

**மற்ற கிளைகள்:**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணுகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மற்றும் நூறு அங்கீகரித்த ஏஜன்ஸிகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

**மானேஜிங் டிரஸ்டி.**

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்.,

[ஸ்தாபிதம் 1939.]


ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் :
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி-1.
Phone No. 3660

விற்பனை டிப்போ :
31, சின்னக் கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி-2
Phone No. 4202


வைத்தியர்களுக்குத் தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன.

வைத்தியர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.

## எமது விசேஷ புத்தக வெளியீடு-1.

எமது ஸ்தாபனத்தில் தயாராகும் மருந்துகளின் செய்முறையை விளக்கும்

# ஔஷத யோக ஸங்கிரஹம்

முதல் பாகம்

பிரதி விலை ரூ. 6-00. தபால் செலவு தனி.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்

T. S. ஈச்வரன், L.I.M. மானேஜிங்டைரக்டர்.

GRAM: KALIA

Phone: Off. 3232, Res. 4343

# KALIA BROTHERS (Regd.)

INDIAN DRUGS MERCHANTS

JULLUNDUR CITY. (INDIA)

| Price List | | Rs. ps. |
|---|---|---|
| Pure Musk | per gram | 50-00 |
| Pure Saffron | | 2-50 |
| Pure Gorochanam | per gram | 6-50 |
| Pure Pearls Spl. | ,, | 10-00 |
| ,, No. 2 | ,, | 7-00 |
| ,, No. 3 | ,, | 4-00 |
| Pure Ambar No. 1 | ,, | 3-50 |
| ,, No. 2 | ,, | 2-50 |
| ,, No. 3 | ,, | 2-00 |
| Pure Silver Leaves | ,, | 0-80 |

## PACHAKARPURAM

| | | |
|---|---|---|
| Spl. Bhimseni | per gram | 0-30 |
| Singapuri (Yellow) | ,, | 0-25 |
| German or Japan | ,, | 0-20 |
| Powder Pachakarpuram | | 0-06 |
| Pure Menthol | ,, | 0-45 |
| Pure Thymol | ,, | 0-20 |
| Ashtavargam | per Kilo | 7-50 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kshir Kakoli | ,, | 8-00 |
| Ridhi Vridhi | | 12-00 |
| Silajit (Kalmodam) | | |
| Suryatapi Silajit No. 1 | ,, | 100-00 |
| No. 2 | ,, | 85-00 |

## CRUDE DRUGS

| | | |
|---|---|---|
| Attis Bitter | ,, | 80-00 |
| Beedana | ,, | 20-00 |
| Guggulu Shudh | ,, | 12-00 |
| Gowela | ,, | 60-00 |

| Price List | | Rs. Ps. |
|---|---|---|
| Kuth No. 1 | per Kilo | 5-00 |
| Moosli White | ,, | 15-00 |
| Pushkar mool | ,, | 5-00 |
| Rose Flower Dry | ,, | 10-00 |
| Som Lata | ,, | 10-00 |
| Salib Panja | ,, | 85-00 |
| Salib Gatha | ,, | 20-00 |
| Shingraf | ,, | 300-00 |
| Tiger's Fat | ,, | 45-00 |
| Bears Fat | ,, | 40-00 |
| Pure Vanslochan | ,, | 80-00 |

## AYURVEDIC MEDICINE

| | | |
|---|---|---|
| Chander Prabha | per Kilo | 70-00 |
| Chavan prash | ,, | 10-00 |
| Gudoochi Sattoo (Sindi Maw) | ,, | 12-00 |
| Ras Sindur | ,, | 300-00 |
| Shudh parad | ,, | 300-00 |
| Swaran Vang | ,, | 200-00 |
| Yogaraj Guggulu | ,, | 30-00 |
| Kaishore ,, | ,, | 30-00 |
| Maha Yogaraj ,, | ,, | 140-00 |
| Abrak Bhasam | ,, | 200-00 |
| KantLoh Bhasam | ,, | 85-00 |
| Loh Bhasam Special | ,, | 150-00 |
| Shring Bhasam | ,, | 35-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Mandur Bhasam | ,, | 35-00 |
| Silajit Bhasam | ,, | 35-00 |
| Silver Bhasam | ,, | 700-00 |
| Swaran Makshik | ,, | 80-00 |
| Sulphur Purified | ,, | 50-00 |
| Tamber Bhasam | ,, | 300-00 |
| Sidh Makar Dhwaj | per gram | 4-20 |
| Makar Dhwaj ordinary | | 0-80 |

Please ask for detailed Price List 6¼% Commission to the readers of Vaidya Chandrika

தந்தி: "அம்ருதம்" P. B. No. 1382. போன்: 26006

# ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD. AVP

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.**

**எங்களுடைய கிளைகள்:**

| | | |
|---|---|---|
| 1. புது டில்லி : | 23 B, பூஸா ரோடு, | போன் ; 585687 |
| 2. மதராஸ் 14 : | கௌடியா மடத் தெரு | ,, 85752 |
| 3. கள்ளிக்கோட்டை : | மொயிதீன் பள்ளி ரோடு | ,, 2984 |
| 4. திருச்சூர் : | ரௌண்ட் மேற்கு | ,, 378 |
| 5. ஏர்ணுகுளம் 6 : | வளிஜ்ஜம்லம் | ,, 494 |
| 6. பாலக்காடு-1 : | மார்க்கெட் ரோடு | ,, 195 |
| 7. பொன்னுனி : | கடைவீதி | ,, 41 |
| 8. கண்ணனூர் : | பிள்ளையார் கோயில்ரோடு | ,, 92 |
| 9. ஆலத்தூர் : | கோர்ட் வீதி | |
| 10. கோயமுத்தூர் : | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில் | 33758 |
| 11. கஞ்சிக்கோடு : | மெயின் ரோடு. | |
| 12. கோயமுத்தூர் | 229, ராஜவீதி, | ,, 33988 |

**சேல்ஸ் டிப்போ :**

இந்திரா பில்டிங், சப் ஜெயில் ரோடு, கள்ளிக்கோட்டை.

**பாக்டரி :**
கஞ்சிக்கோடு (கேரளா)

**நர்ஸிங் ஹோம் :**
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் : 22194)

தலைமை ஆபீஸிலும், எல்லா கிளைகளிலும் தரமுள்ள ஆயுர்வேத மருந்துகளும், நிபுணத்துவம் நிறைந்த வைத்திய ஆலோசனையும் கிடைக்கும். பிரதம வைத்தியரின் மூலம் கடிதங்கள் வழியாகவும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படும்.

**மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :**

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

OSR.

## வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும் :

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML ரூ. 7-00; 12 ML. ரூ.3-75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது.]

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

# BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

உயர்ந்த கஸ்தூரி, குங்குமப்பூ,
பச்சைகர்பூரம் முதலியவைகளுக்கு
மிகவும் சிறந்த இடம்.

Wholesale Dealers in:

Musk Saffron and Ayurvedic Drugs etc.

CORRESPOND IN HINDI OR ENGLISH

# Shri Markanday Musk Depot

(Regd.)

Importers and Exporters

Civil Lines, LUDHIANA, PUNJAB.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHANOT BROTHERS**

(REGD.)

**Wholesale Musk, Saffron and Indian Drugs Merchants,**

**LUDHIANA - PUNJAB**

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

***K. L. TALWAR & BROS.,***

MUSK MERCHANTS,

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.




# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 32<br>Vol. 32 | ஸெளமிய தை<br>1970 பிப்ரவரி | பகுதி 2<br>No. 2 |


நமச்சிவ குமாராய.

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।
यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

## சுடுகிற பழமா? சுடாத பழமா?

சுவாமீ ஒளவை பிராட்டியை இம்மாதிரி கேள்வி கேட்டாராம். மரக்கிளையில் இருந்துகொண்டு பல அரிய கேள்விகளைக் கேட்ட பிறகு பிராட்டியாரும் எல்லாவற்றிற்கும் பதில் அளித்த பிறகு முருகன் சந்தோஷம் அடைந்தாராம். பிராட்டியார் கடவுளின் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கூறினர் என ஏற்படக்கூடாது என்பதற்காக, பிராட்டியாரால் பதில் கூற இயலவில்லை என்பதனையும் காண்பிக்க வேண்டி இந்தக் கேள்வியைக் கேட்டாராம். பிராட்டியாரும் சுவாமியின் கேள்வியைக் கேட்டு மரக்கிளைகளில் உள்ள பழங்களில் சுட்டவை சுடாதவை என்ற பேதம்கூட உளதோ என யோசித்து பதில் கூற இயலாத நிலையில் இருந்தாராம். இதுவரையில் கிளையில் தொங்கும் பழம் சுடும் என்பதனைக் கேள்விப்பட்டதில்லை அல்லவா! அதனுல் சுடாத பழம் வேண்டும் என வேண்டினுராம். கடவுள் பழத்தை உதிர்த்தவுடன் அவை புழுதியில் விழுந்ததால் பிராட்டியார் மண்ணை ஊதி ஊதிச் சாப்பிட்டாராம். கடவுள் சிரித்தாராம். கடவுள் கேட்ட கேள்வியின் கருத்து அப்போதுதான் பிராட்டியாருக்கு விளங்கியது,

அதுபோன்று நமது மாண்புமிகு அமைச்சர் ஆயுர்வேத சித்த யூனானி வைத்யர்களுக்கு ஓர் டைரக்டரைத் தருவதாகக் கூறுகிறார். இது மிக்க சந்தோஷப்படவேண்டிய விஷயம். எல்லோரும் வரவேற்கவேண்டியதும்கூட. ஆனால் சுடாதபழம் வேண்டியது போல் தனி இந்திய வைத்ய அறிவாளிகளையே டைரக்டராக நியமிக்க வேண்டும் எனக் கோருகிறோம். இந்திய வைத்யம் தெரியும் என மார்தட்டுகின்ற ஆங்கில வைத்யர்களையோ அல்லது எங்கள் வைத்ய முறைதான் சிறந்தது என பேசிக்கொள்ளும் இந்திய வைத்யரல்லாதவரையோ இத்துறையில் அதிகாரிகளாக நியமிப்பது இந்திய வைத்யத்திற்கு ஊறுவிளைவிப்பதாகும். பூனைகளுக்கு குரங்கு அப்பத்தைப் பங்கிட்ட கதையாகத்தான் முடியும்.

இன்னும் ஓர் யோசனைகூட கனம் அமைச்சரின் வார்த்தைகளிலிருந்து தெரியவருகிறது. ஹோமியோபதி வைத்யத்தைக் கூட இந்த டைரக்டரின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரலாமா? கூடாதா? என்பதாகும். ஹோமியோபதி வைத்யத்திலோ அல்லது அலோபதி வைத்யத்திலோ நாம் குறைகூற விரும்பவில்லை. ஆனால் அவைகள் அடிப்படையில் சித்த ஆயுர்வேத யூனானி வைத்யங்களுக்கு மாறானவை என்பதைப் பல அறிவாளிகள் அறிவார்கள். பஞ்சபூத தத்வங்களையும் வாதபித்த சிலேஷ்மங்களின் செயல்களையும் ஆதாரமாகக் கொண்டுள்ள முறைகள் எந்த முறையாக இருந்தாலும் சரி ஒரே வரிசையில் சேர்த்துக்கொள்ளப்படுவதில் ஆட்சேபணை இருக்காது அப்படியல்லாது வேறு பல முறைகள் இந்திய முறைகள் என சொல்லத் துணிவது சாகஸமாகும்.

யூனானி முறையிலும் கூட சிறிது சித்த ஆயுர்வேத முறைகளிலிருந்து மாறுதல் காணப்படுகிறது. இருந்தாலும் சுச்ருதஸம்ஹிதையின் சில நுட்பமான அபிப்பிராயங்களை ஊன்றிப் பார்க்கும்போது அவை அதற்கு ஒத்துப்போகின்றன. ஆகவே இந்த மூன்று முறைகள்தான் தேசீய முறைகள் என்ற பெயருக்கு உரியன. இந்தியன் மெடிகல் கௌன்சில் என்ற பெயர் தங்களுக்கே உரியது என்று இடத்தைப் பிடித்துக்கொண்ட பிறகு ஆங்கில வைத்யர்கள் ஸ்தாபிக்கின்றனர். இம்மாதிரி ஹோமியோபதி வைத்யர்களும் கூறுவார்களேயாகில் பரமேசுவரரின் சரீரத்தை பார்வதி பாதியாகவும் பெருமாள் பாதியாகவும் பங்கிட்டுக்கொண்டதால் பரமேசுவரன் இல்லாது போய்விட்டார் என ஓர் கவி வருணித்ததுபோன்று தேசீய வைத்யம் தலைஎடுக்க முடியாமல் போய்விடும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறோம். தனி டைரக்டர் நியமனத்தை மறுபடியும் சந்தோஷத்துடன் வரவேற்று அரசாங்கத்திற்கு நன்றி செலுத்துகிறோம்.

---

மகாநாட்டில் பேருரை

# உலக சுகாதாரத்திற்கு ஆயுர்வேதத்தின் உதவி

டாக்டர் வி. நாராயணசாமி, H.P.I.M., சென்னை–17.

## முன்னுரை

சுகாதாரமென்பது தனிப்பட்ட ஒரு மனிதனுக்கும் உண்டு; தேசத்திற்கும் உண்டு. பல தேசங்கள் சேர்ந்தது தான் உலகம். அதிவேகமான போக்குவரத்து சாதனங்களைக்கொண்ட இந்நாட்களில், உலகத்தில் கண்டங்கள் வேறுபட்டிருந்தாலும், தேசங்கள் வெவ்வேறு திசைகளில் பரவி இருந்தாலும், நோய்கள் அதி சீக்கிரம் பரவக்கூடும். ஆகையால் வைத்தியர்களும், சுகாதார நிர்வாகிகளும் உலக நோக்கத்திலேதான் அவர்களுடைய திட்டங்களை வகிக்கவேண்டும்.

ஆயுர்வேதம் பழங்கால வைத்தியம். அது தினந்தோறும் பல வகையில் முன்னேற்றமடைந்துவரும் நவீன வைத்தியத்திற்கு எவ்வகையில் பயன்படும் எவ்வகையில் சகாயமளிக்கக் கூடும் என்பதுதான் பிரச்னை. நவீன வைத்தியம் உலகத்தில் பரவலாகப் பழக்கத்திலிருக்கிறது. பல தேசங்களில் இடைவிடாமல் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேற்கு திசையில் அமெரிக்காவிலிருந்து கீழ்திசையில் ஜப்பான் தேசம் வரையிலும் நவீன வைத்தியமே பெரும்பாலாகப் பழக்கத்தில் இருந்து வருகிறது. அப்படி இருக்க கிருஸ்துவிற்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னதாகவே இருந்த ஆயுர்வேதம் – இந்த 20-வது சதாப்தம் வரையிலும் எவ்விதமான மாறுதலையும், வளர்ச்சியையும் அடையாதது எங்ஙனம் சகாயத்தை அளிக்கக் கூடும், என்று கேட்கக்கூடும். ஆயுர்வேதத்தின் அடிப்படை தத்துவங்கள் எக்காலத்திற்கும் உகந்ததாக இருக்கின்றன. கால தேசங்களுக்கு அப்பாற்பட்ட தத்துவங்கள் ஆனதால் எங்ஙனம் ஆதிகாலத்தில் அவை பயன்பட்டனவோ, எங்ஙனம் பரதகண்டத்தின் மனிதர்களின் ஆயுளைக் காப்பாற்ற உதவியதோ அதே போன்று இந்நாளிலும் உதவக்கூடும்; பல நாடுகளுக்கும் உதவக்கூடும். உதாரணமாக நெருப்பு வெப்பமானது சுடக் கூடியது, தண்ணீர் தட்பமானது, சூட்டை தணிக்கக்கூடியது என்கிற விஷயத்தில் காலமும் தேசமும் மாறுபட்டாலும் இக்

குணங்கள் அவைகளுக்கு மாறுபடுவதில்லை. அதேபோல் தான் ஆயுர்வேதத்தின் பல தத்துவங்கள் பிரகிருதி. இந்த அடிப்படை தத்துவங்களில், ஆயுர்வேதம் உலக சுகாதாரத்திற்கு அளிக்கக் கூடிய உதவிகளில் ஒன்று பிரகிருதி என்பது. பிரகிருதி என்ற சொல்லிற்கு சந்தர்ப்பத்தை அநுசரித்துப் பல பொருள்கள் சொல்லக்கூடும். இயற்கை அல்லது மூலப்பொருள் என்பது ஒன்று, குண விசேஷம் என்பது இரண்டாவது, சாங்கியத்தில் புருஷன் என்பதற்கு மாருனதும் உலக அமைப்பிற்கும் வளர்ச் சிக்கும் ஆதியுமான பொருளுக்கும் பிரகிருதி என்று சொல் வழங்கப்படுகிறது. இச்சொல்லிற்கு இப்பொருள்களெல்லாம் பொருத்தமானாலும், ஆயுர்வேதத்தில் இதற்குத் தனிப்பட்ட பொருளுண்டு. இது மனிதனுடைய தன்மையை குறிக்கும் ஒரு சொல். இது மனிதனுடைய உடலின் தன்மையையும், மனத்தின் மாறுபாடுகளையும் புத்தியின் விசேஷங்களையும் தெரிவிக்கக்கூடிய ஒரு சொல். ஆயுர்வேத வைத்தியர்களுக்கு இவன் வாதபிரகிருதி இவன் கபப்பிரகிருதி, இவன் பித்தப்பிரகிருதி என்றால் அம்மனிதர் களுடைய உடல்கூறு, மனோவேகம், புத்தியின் தன்மை எங்ஙன மிருக்கும் என்பது உடனே தெரியும் அந்த விசேஷ அறிவைக் கொண்டு தான் வைத்தியன் மருந்தை நிர்ணயிக்கவும், பத்தியங் களைச் சொல்லவும் முடிகிறது. அந்த பிரகிருதி என்ன? எப்படி உண்டாகிறது என்பதைக் கவனிப்போம்

> சுக்ரார்த்தவஸ்தைர் ஜந்மாதௌ விஷேணேவ
> விஷக்கிரிமே:
> தைச் சதிஸ்ர: ப்ரக்ருதய: (அஹ்ரு ஸூ 1)
>
> சுக்ரசோணிதஸம்யோகே யோ பவேத்தோஷ உத்கட:
> ப்ரக்ருதிர் ஜாயதே தேந (ஸூ. சா 4)

ஆண் பீஜமும் பெண் பீஜமும் சேரும்பொழுது எந்தெந்த தோஷம் அவைகளில் வலுத்து இருக்கிறதோ அந்தந்த தோஷங் களால் வாத, பித்த, கபமென்கிற மூன்று பிரகிருதிகள் உண்டா கின்றன என்பது பொருள்.

தாய் தகப்பனின் பாரம்பர்ய (Hereditory) குணங்கள் மகவிற்கு வருவது வேறு, இப் பிரகிருதியினால் வரும் குணங்கள் வேறு. வம்ச பாரம்பர்யமும் உடல் கூறும் மற்றைய குண விசேஷங் களும் ஜீன்ஸ் (Genes) என்று சொல்லப்படும் ஆண் பெண் பீஜங்களின் ஒரு பகுதியால் ஏற்படுகிறது. உடலின் சில பாகங்கள் தகப்பனிடத்திலிருந்தும், சில பாகங்கள் தாயினிடத்தி லிருந்தும் உண்டாகின்றன. எலும்புகள், நகங்கள், பற்கள், தலைமயிர், ரக்தக்குழாய்கள், ஆண்பீஜம் முதலியன தகப்பனிடத்தி

லிருந்தும், ரக்தம், மேதஸ் என்றும் கொழுப்பு. மாமிச தசைகள்' மஜ்ஜை என்றும் எலும்புக்குள்ளிருக்கும் திரவதாது, ஹிருதயம், கல்லீரல், மண்ணீரல் போன்ற மிருதுவான பாகங்கள் தாயினிடத்திலிருந்தும் உண்டாகின்றன இவைகள் மனிதவர்க்கத்திலிருக்கின்ற எல்லோருக்குமே பொதுவானது ஒரு குழந்தைக்கும், ஒரே வயிற்றில் பிறக்கின்ற மற்றொரு குழந்தைக்கும் வித்தியாசம் கிடையாது. இதே போன்றுதான் பாரம்பர்ய குணங்கள். இரண்டு சகோதரர்கள் ஒரே மாதிரி தேக அமைப்பு உள்ளவர்களாக இருக்கக்கூடும், ஆனால் அவர்களுடைய பிரகிருதிகள் வேறாக அமையலாம்.

ஆண் பெண் சேர்க்கையின்பொழுது, அவர்களுடைய ஆகாரத்தாலும் சூழ்நிலையாலும் தேகத்தில் தோஷங்களின் அளவு குறைந்தோ அதிகரித்தோ இருக்கக்கூடும். அந்த தோஷங்கள் ஆண் பீஜத்தையோ பெண் பீஜத்தையோ உறுத்துமானால், அப்பொழுது உண்டாகும் கர்ப்பமானது அந்த தோஷத்தினுடைய குணங்களைப்பெறுகிறது தோஷங்கள் பிரகோபமடைந்து சுக்கிர சோணிதங்களைக் கெடுப்பதில்லை. அப்படி கெடுத்தால் கர்ப்பமே தரிக்க முடியாது. சுக்கில சோணிதங்களில் தோஷங்கள் வலுவடைகின்றன என்பதைத்தான் நாமறிந்துக்கொள்ளவேண்டும். உருவத்தில் ஒரே மாதிரி இருக்கும் சகோதரர்கள் குணத்திலும், புத்தியிலும் வேறுவிதமாக இருப்பதை நாம் பார்க்கிறோம். இம்மாறுதலுக்குக் காரணம் வமிச பாரம்பர்ய குணங்களைச் செலுத்தும் ஜீன்ஸ் ஒன்றாகவே இருந்தாலும், ஆகாரத்தாலும், சூழ்நிலையாலும் ஆண்பெண்கள் சேரும்போது உடலில் உண்டாகும் வாதபித்த கபங்களில் ஏற்றத்தாழ்வு சுக்கிர சோணிதங்களை ஆசிரயித்து பிரகிருதிபேதங்களை கர்ப்பத்திற்கு உண்டாக்குகின்றன. இந்த பேதங்களால் உடலில், மனதில், புத்தியில் வெவ்வேறு குறிகள் உண்டாகின்றன. பிறகு இக்குறிகளால் மனிதன் எந்த பிரகிருதியை உடையவன் என்பதை தெரிந்துக்கொள்ளலாம்.

பிறந்த நாள்முதல் இறக்கும் வரையிலும் இக்குறிகள் இவனை விடுவதில்லை. சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரியும், படிப்பின் பண்பாட்டினாலும் ஓரளவிற்கு இப்பிரகிருதி குணங்களில் மாறுதலை உண்டாக்கலாம் ஆனால் அவைகளை முற்றிலும் மாற்றமுடியாது

இப்பிரகிருதியின் குறிகளினால் வைத்தியன் எப்படி பிரயோஜனமடைகிறான் என்பதை நாம் கவனிக்க வேண்டும். நோயுற்றவர்களுக்கும் இவ்வறிவு எப்படி உபயோகமாகிறதென்பதை நாம்

விவரிக்க வேண்டும். இப்பிரகிருதிக்ஞானம் நோயின் தன்மையை அறியவும் மருந்துகளைப் பிரயோகிப்பதிலும் அதிக பயன்படுகின்றன. உதாரணமாக, ஒரு பித்த பிரகிருதிகாரனுக்கு, இயற்கையில் பித்தம் அதிகரித்திருக்கின்ற சரத்காலத்தில், ரக்தபித்தம் என்னும் நோய்வந்தால் அந்நோயின் முடிவு (Prognosis) அவ்வளவு திருப்திகரமாக இராது. வைத்தியர் அதிக ஜாக்கிரதையுடனிருக்கவேண்டும். ஆமவாதத்திற்கு சேராங்கொட்டையில் செய்த மருந்து மிக நல்லது. ஆனால் அதைப் பித்த பிரகிருதி உள்ளவனுக்குக் கொடுக்கக்கூடாது. சரத்காலத்திலும் கிரீஷ்ம காலத்திலும் உபயோகிக்கக் கூடாது. மருந்து வியாதிக்கு உகந்ததாக இருந்தாலும் தேகத்திற்கு உகந்ததில்லை. இதைத்தான் நவீன வைத்தியத்தில் ஔஷத அசாத்மியதா (Drug Allergy) என்று சொல்லுவார்கள். இதில் மரணம் கூட சம்பவிக்கக் கூடும்.

இந்த பிரகிருதி விஷயம் நவீன வைத்தியத்தில் விரிவாகக் கிடையாது. சமீப காலத்தில் ஷெல்டன் (Sheldon) என்பவர் உடலை மூன்று வகையாக பிரித்து எண்டோமார்ப், மீசோமார்ப், எக்டோமார்ப் (Endomorph, Mesomorph, Ectomorph,) என்று பெயரிட்டார். இதில் எந்தெந்த வியாதி எத்தகைய உடல் கூறு இருப்பவர்களுக்கு வரும் என்றும் தமது புத்தகத்தில் விரிவாக ஆராய்ச்சிக்குப்பிறகு எழுதியுள்ளார். ஆனால் அந்த உடல் கூறுகள் எங்ஙனம், ஏன் அமைகிறதென்பதை தெரிவிக்கவில்லை. மேலும் ஒவ்வொரு உடல் கூற்றையும் தனித்தனியாக அளந்து ஒரு முடிவிற்கு வரவேண்டும். ஆகையால் இந்த பிரகிருதியின் தன்மையை எல்லா வைத்தியர்களும் அறிந்துக் கொள்ள வேண்டும். இது, ஆயுர்வேதம் நவீன வைத்தியத்திற்கு செய்யும் சகாயத்தில் முதலும் முதன்மையானதுமாகும்.

விகிருதி விஞ்ஞானம்: இரண்டாவதாக விக்ருதி விஞ்ஞானம் என்றும் ஒரு கலை ஆயுர்வேதத்தில் ஆயுளை நிர்ணயிக்கச் சொல்லப்படுகிறது. விகிருதி என்றால் பிரகிருதி அல்லது இயற்கைக்கு மாறுபட்ட நிலைமை என்று பொருள். எப்படி புஷ்பம் பழத்தை அறிவிக்கிறதோ, புகை நெருப்பை அறிவிக்கிறதோ, மேகங்கள் மழையை அறிவிக்கின்றதோ அதே போன்று வரும் மரணத்தை அறிவிக்கின்ற குறிகளை விகிருதி என்று சொல்லப்படுகிறது என்கிறார் வாக்படர்.

புஷ்பம் பலஸ்ய தூமோக்னேர் வர்ஷஸ்ய ஜலதோதய:
யதா பவிஷ்யதோ லிங்கம் ரிஷ்டம் ம்ருத்யோஸ் ததாத்ருவம்.
(அ. ஹ்ரு. 5)

இந்த அரிஷ்ட லக்ஷணங்களில்லாமல் மரணம் சம்பவிப்பதுமில்லை, அரிஷ்ட லக்ஷணங்களைக் கண்டபின் மனிதன் ஜீவிப்பதுமில்லை என்கிறார் மேலும் வாக்படர்.

இந்த அரிஷ்ட லக்ஷணங்கள் இருவகையாகப் பிரிக்கப்படு கிறது 'ஸ்தாயி' அஸ்தாயி என்று. சில வியாதிகளில் சில சமயம் தோன்றி மறைகின்ற ரிஷ்ட லக்ஷணங்களுக்கு அஸ்தாயி என்றும், பல நாட்கள் மறையாமலே இருக்குமாயின் ஸ்தாயி ரிஷ்டம் என்றும் பெயர். எந்த ஒரு மனிதனுக்கு தன்னுடைய உருவம் இந்திரியங்கள், நிறம் செய்கை இவற்றில் இயற்கைக்கு மாறுபட்ட நிலைமை காணப்படுகிறதோ, அந்த மாறுதலுக்கு காரணம் கண்டு பிடிக்க முடியாமல் இருக்கிறதோ அதை சுருக்கமாக ரிஷ்டம் என்கிறோம். (அநிமித்தம்) மனிதனுக்கு நோய் வருங்காலத்தில் அந்நோயின் காரணமாக சில மாறுதல்கள் உடலில் காணக் கூடும். அந்நோய் நீங்கிய காலத்து உடலின் இயற்கைத் தன்மை வரும். ஆனால் காரணமின்றியே, நம்மால் அறியமுடியாத காரணத்தால் உடலில் மாறுதல்கள் தோன்றும் போதுதான் ரிஷ்ட லக்ஷணங்கள் என்று சொல்லுகிறோம். ஒவ்வொரு வியாதிக்கும் அரிஷ்ட லக்ஷணங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் வைத்தியர்களுக்குத் தெரியும். ஆனால் வியாதியின்றி ஏற்படும் குறிகளை நாம் கவனிக்கவேண்டும். இதில் ஆராய்ச்சி அதிகம் தேவைப்படுகிறது.

உதாரணமாக தேகத்தில் விழுந்த ஜலம், தாமரையிலையில் போன்று சரீரத்தில் ஒட்டாமல் நழுவினால் ஆறு மாதங்களுக்கு அப்பால் ஜீவிக்க முடியாதென்றும், அதே போன்று, சிரைகள் (Veins) முன்பு தெரியாமல் திடீரென்று முகத்திலும் அடிவயிற்றி லும் காணப்பட்டாலும் ஆறு மாதங்களில் மரிப்பான் என்று சொல்லப்படுகிறது. திடீரென்று காரணமில்லாமல் மரண மடையும் எல்லோரையும் ஹிருதயம் நிற்பதால் மரணமடைந் தார்கள் என்று சொல்வது தவறாகும். எல்லா மரணங்களுமே கடைசியில் ஹிருதயம் நிற்பதால் தான் சம்பவிக்கிறது. இந்த ரிஷ்ட லக்ஷணங்கள் ஒரு வருஷம், ஆறு மாதம், ஒரு மாதம் என்ற கணக்கில் மரணத்தை விளைவிக்கின்றன. அதற்கு உகந்த காரணங்களை நாம் கண்டு பிடிக்கவேண்டும். இந்த விகிருதி விஞ்ஞானம் இரண்டாவது சகாயம், நவீன வைத்தியத்திற்கும், உலக சுகாதாரத்திற்கும்.

மர்ம விஞ்ஞானம்: மூன்றாவதாக நமது சாஸ்திரத்திலிருப்ப தும், மற்ற வைத்தியங்களில் காணப்படாததுமான விஷயம் மர்ம விஞ்ஞானமென்பது. இது உடல் சம்பந்தப்பட்ட விஷயம். தேகத்

தில் 107 மர்மங்களிருக்கின்றன. இந்த மர்ம ஸ்தானங்களில் அடிபட்டாலோ நோய்கள் வந்தாலோ மரணமோ, தீராத வலியோ, அங்கஹீனமோ உண்டாகுமென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன ஜபானில் பிரசித்தியாகயிருக்கும் ஜூடோ என்கிற துவந்த யுத்தமும் தென்னாட்டில் பரவலாக சொல்லப் படுகிற வர்ம சாஸ்திரமும் மர்ம விஞ்ஞானத்தைப் போன்றதே. நவீன வைத்தியத்தில் உன்னத தசையை அடைந்திருக்கிற அறுவை சிகித்சைக்கு இந்த மர்ம விஞ்ஞானம் அதிக உபயோக மாக இருக்கும். 107 மர்மங்களை, சத்யோ பிராணஹரம் (அடிபட்ட உடனே மனிதன் மரிக்கும் தன்மையுடையது) காலாந்தர பிராண ஹரம் அடிபட்ட 15-வது நாள் அல்லது ஒரு மாதத்தில் மரிக்க வைப்பது) விசல்யக்னம் (சல்யத்தை எடுத்தவுடனே மரணத்தை உண்டாக்குவது வைகல்ய கரம் (அடிபட்டு ஊனத்தை உண்டாக்குவது) என்று 5 வகையாக பிரித்திருக்கிறார்கள். இவைகள் எக்காரணம்கொண்டு இப்படி ஆகிறதென்பதை அறி வதோடு சஸ்திர சிகித்சைக்கு இதை பிரயோஜனப்படுத்தவும் வேண்டும். ஆயுர்வேதத்தில் அறுவை சிகித்சை முன்னேற்ற மடையவில்லை என்பது தெரிந்ததே. நவீன அறுவை சிகித்சைக் கும் மர்ம விஞ்ஞானம் அதிகம் உதவுமென்பது எனது கொள்கை.

---

# தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

## 26-வது மஹாஸம்மேளனம்

---

நமது மஹாமண்டலத்தின் 26வது மஹாஸம்மேளனம் மதுரை வடக்கு வெளி வீதியிலுள்ள ஸேதுபதி ஹைஸ்கூல் ராமண்ணா ஹாலில் சென்ற 4—1—70 ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு ஆரம்பமாயிற்று. ஸ்ரீதந்வந்தரி பிரார்த்தனைக்குப் பிறகு, தஞ்சை ஸரஸ்வதி மஹாலய நூலாராய்ச்சிக்குழுத் தலைமை ஆராய்ச்சி ஆசிரியர் வைத்ய விசாரத, ஆயுர்வேதசிரோமணி சாஹித்யசிரோமணி ஸ்ரீ V. S வெங்கடஸுப்ரமண்ய சாஸ்திரீ அவர்கள் ஸ்ரீதந்வந்தரி கொடியை ஏற்றிப் பேசினார். ஆயுர்வேத பிரவர்த்தகரான ஸ்ரீ தந்வந்தரியின் பெருமைகளை விளக்கிக்கூறி இன்றும் ஆயுர்வேதம் மக்களுக்கு ஸேவைபுரிந்துகொண்டிருப் பதற்கு முகாந்தரத்தை விரிவாகக் கூறினார். மதுரை ஆர்ய

வைத்தியன் ஸ்ரீ P. V. ராகவவாரியர் அவர்கள் மஹா நாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகளை வரவேற்றார். மதுரை ஜில்லா நீதிபதி ஸ்ரீ C. J. R பால் அவர்கள் இம்மஹா நாட்டைத் துவக்கி வைக்கையில், ஆயுர்வேத வைத்தியத்தைப் பற்றி இந்தியர் பெருமை கொள்ளலாம் என்றும், ஆயுர்வேதத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் மூலிகைகளின் ஆராய்ச்சி அவசியம் என்றும் கூறினார். மஹா நாட்டின் விஞ்ஞானப் பிரிவை மதுரை தினமணி செய்தி ஆசிரியர் ஸ்ரீ வி. ஸந்தானம் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். ஆயுர்வேதத்தை ஸுலபமாகக் கற்கும் முறையில் அப்பாடபுத்தகங்களை தயாரிக்கும்படி அவர் யோசனை கூறினார். மஹா நாட்டிற்கு வத்திருந்த வாழ்த்துச் செய்திகளை திருச்சி வைத்திய விசாரத ஆயுர்வேத சிரோமணி ஸ்ரீ S V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் வாசித்தார். பின்னர் மஹா நாட்டுத் தலைவர் திருச்சி ஸ்ரீ T. S. ஈச்வரன், L I.M. அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். (இது சென்ற இதழில் வெளியாகியுள்ளது). அதன் பின்னர் சென்னை இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி நிர்வாகத் தலைவரும், டாக்டர் ஸ்ரீநிவாஸமூர்த்தி ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் டைரக்டருமான ஸ்ரீ V. நாராயணஸ்வாமி, H P.I.M., அவர்கள் உலக சுகாதார அபிவிருத்திக்கு ஆயுர்வேதம் எவ்வாறு உதவியாக இருந்து வருகிறது என்பதை விளக்கினார். (இதன் விபரம் மற்றொரு பக்கம் வெளியாகிறது) பின்னர் பாளையங்கோட்டை இந்திய வைத்தியக் கல்லூரி தலைவர் ஸ்ரீ C. S. உத்தமராயன், H.P.I.M, அவர்கள் பேசுகையில், ஸமீப காலத்தில் அகில இந்திய வைத்திய முறைக் கவுன்சில் அமைக்கப்படலாம் என்றும் அது இந்திய வைத்திய முறைகளின் அபிவிருத்திக்கு உதவியாக இருக்கும் என்று நம்புவதாகவும், இந்திய வைத்திய முறைகளின் சிறப்பான தனிப்பட்ட அம்சங்களையும் விரிவாகக்கூறினார் திருச்சி ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்கள் ஆயுர்வேத புத்தகங்களை விஷயவாரியாகத் தமிழில் பிரசுரிக்க வேண்டிய அவசியத்தை எடுத்துக்கூறி, ஆயுர்வேத, சித்த வைத்திய முறைகளின் ஒற்றுமைகளை விளக்கி, இவ்விரு முறைகளையும் இணைக்க வழி செய்ய வேண்டும் என்று கூறினார். பிற்பகலில் நடந்த சாஸ்திர சர்ச்சாபரிஷத்தில், கரூர் வைத்திய வாசஸ்பதி ஸ்ரீ P. S. ராமசர்மா அவர்கள் "வாத சோணிதம்" என்பதைப் பற்றி ஸம்ஸ்கிருதத்தில் உரையாற்றினார். (இதன் தமிழாக்கம் பின்னர் வெளிவருகிறது) மதுரை ஆர்ய வைத்தியன் ஸ்ரீ P. V. ராகவவாரியர் அவர்கள் வாத சோணிதத்தைப் பற்றி பேசுகையில் நவீன வைத்திய ரீதியாகவும் இந்த வியாதியின் தன்மையை விவரித்துக் கூறினார். மாலையில் நடந்த மஹாமண்டலப் பொதுக்கூட்டத்தில், மஹா

மண்டலப் பொதுக்காரியதரிசி ஸ்ரீ A ராகவராவ் அவர்கள் மஹாமண்டலத்தின் ஆண்டறிக்கையையும், வரவு செலவு கணக்கையும் சமர்ப்பித்தார் பின்னர் மஹாமண்டலத்தின் புதிய நிர்வாஹ ஸமிதி அங்கத்தினர் பத்திரிகா நிர்வாஹ ஸமிதித் தேர்தல் நடைபெற்றது. பிறகு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின தலைவரது பின்னுரைக்குப் பிறகு, மதுரை வைத்ய ஸ்ரீ K. வன்னியராஜ் அவர்கள் மஹாநாட்டில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். மதுரை ஆயுர்வேத, சித்த வைத்தியர்கள் இம்மகாநாட்டிற்கான எல்லா ஏற்பாடுகளையும் வெகு சிறப்பாகச் செய்து நல்ல முறையில் நடத்தியதற்கு தமிழ் நாட்டு வைத்திய ஸமூகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது

---

## மகாநாட்டிற்கு வாழ்த்துச் செய்திகள்

**ஸ்ரீ S. சந்திரசேகர், இந்திய சுகாதார மந்திரி, டெல்லி.**

I am glad to learn that the Tamil Nadu Ayurveda Mahamandalam is holding its 26th Annual Conference at Madurai on 4th January, 1970 Madurai is one of the great centres of learning and culture in the South. Indian culture and learning generally suffered a decline during foreign domination but this did not affect the progress of Art and Culture in the South. The Government of India are alive to the need for providing opportunities to the practitioners of Ayurveda to develop it to its pristine glory and, for achieving this objective, have recently established an autonomous Central Council for Research in Indian Medicine (Ayurveda, Siddha and Unani) to encourage and guide researches in them A Bill is now under consideration of Parliment to establish a Statutory Central Council of Indian Medicine to ensure a uniform pattern of education in Ayurveda. Siddha and Unani Systems of Indian Medicine, besides maintaining an All India Register of Practitioners of these systems of Indian Medicine.

I am sure that the Tamil Nadu Ayurveda Mahamandalam will realise the need for containing the population explosion and urge on its members to play an effective part in motivating rural couples to practise family planning.

———

ஸ்ரீ B. S. மூர்த்தி சுகாதார இலாகா ராஜ்ய மந்திரி, டெல்லி.

It gives me great pleasure to note that the Tamil Nadu Ayurveda Mahamandalam is organising its 26th Annual Conference at Madurai on the 4th January, 1970. Ayurveda had flourished through the centuries in Tamil Nadu. The physicians of the South readily took advantage of the numerous herbs available in the region and provided the only means of medical relief. It was the old Government of Madras which started the institutionalised training in Ayurveda, Siddha and Unani by establishing the Government School of Indian Medicine at Madras in 1925. But the scheme of training in this School, which first became a College of Indigenous Medicine and later College of Integrated Medicine, with the result that in 1962 the college was converted into a Medical College. It is my earnest belief that for the survival of our ancient systems of Indian Medicine, it will be necessary for the curricula and syllabus to be so drawn up as to give emphasis to the teaching of subjects of Indian Medicine. It is with this in view that the Government of India have introduced a Bill in Parliament for the constitution of the Central Council of Indian Medicine to lay down uniform standards of training in Ayurveda, Siddha and Uuani. I am sure that all lovers of Ayurveda like the Tamil Nadu Ayurveda Mahamandalam will extend their maximum cooperation in the effective functioning of this Central Council and contribute to the real development of Indian Systems of Medicine,

———

# வல்மீகார்புதங்களும் புற்றுநோயும்

பண்டித. P. S ராமசர்மா, வைத்ய வாசஸ்பதி, கரூர்.

(டிசம்பர் இதழ் தொடர்ச்சி)

---

மது கோசம் என்ற நூலை இயற்றிய ஆசிரியர் கூறுவதாவது:-

இதை வல்மீகம் என்று கூறுவதிலிருந்தே இதற்குப் பல முனைகள் உண்டு என்றும் இது மலைபோல் வளரும் மேடான மாம்சம் என்றும் இது எந்த இடத்தில் இருந்து உண்டாயிற்று என அறிய முடியாது என்றும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று மேலும் இதற்கு சோதன சிகித்ஸை கூறும்போது அக்னி க்ஷாரங்கள் சிகித்ஸை செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது

மணல் போன்று படியும் அழுக்குகளை வெளிப்படுத்துவதால் சர்க்கரார்புதம் மற்றவைகளிலிருந்து வித்யாசப்படுகிறது என்று போஜன் முதலானோர்களும் கூறியுள்ளனர்.

சிகித்ஸா பிரகரணத்தில் வாக்படாசாரியர் சர்க்கரார்புதத்தை மேதோர்புதம் போலக் கருதி காரியம் செய்யவேண்டும் என்று பிரித்துக் கூறாமல் ஒரே வாக்யத்தில் கூறியுள்ளார்.

இந்நோய் மிகுந்த பயங்கரமானது என்பதைக் கொண்டே இதை க்ஷுத்ரரோகத்தில் ஒன்றாகக் கணக்கிட்டுள்ளனர் என்று முன்பே கூறியுள்ளோம்.

இவைகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஆலோசிக்குங் கால் அர்புதம் என்ற நிலையை அடைந்த கிரந்தி வல்மீகார்புதங்கள் (ஆயுர்வேதத்தில்) புற்றுநோய் (Cancer) என்று கருதப் பட்டுள்ளன என்பது புலனாகின்றது.

சிலர் மாம்சார்புதம் சோணிதார்புதம் இவைகளை புற்றுநோய் (cancer) எனப்படுபவை. மற்றவைகள் அல்ல என்று கருது கின்றனர். ஆனால் வல்மீகம் போலவே சமனம் செய்ய முடியாதது என்பது இவைகளின் பொதுத்தன்மை. இந்த நோயின்மூலம் மிக ஆழமாக உள்ளது அதனால் இதை அவகாடமூலம் என்பர். இந்நிலை எல்லா அர்புதங்களுக்கும் பொதுவான குணமாக

இருப்பதால் எல்லா அர்புதங்களையுமே cancer யன்று கூறுவது தான் சரியானது என்பது எமது சொந்தக் கருத்தாகும். மூக்கின் துவாரத்தில் ஏற்படும் அர்புதமும் இந்த கூட்டத்திலேயே சேர்க்கப்படவேண்டும். ஸ்தான பேதம் ஏற்படுவதால் வியாதிக்கு பேதம் இல்லை.

இந்த நோய் மனிதனை எவ்வாறு அடைகின்றது என்ற விஷயத்தை விவரிக்கப் புகுந்தோமானுல் அது மிக நீண்டுவிடும். அவை ஸுச்ருதர், வாக்படர், மாதவர், முதலானேர்களால் நன்கு விளக்கிக் கூறப்பட்டுள்ளன. வைத்யர்கள் அவைகளைப் படிப்பதாலேயே இது விஷயத்தில் அறிவைப்பெற முடியும்.

மேல் நாட்டவர் அக்னி சந்தாபம் அதாவது உஷ்ணத் தாக்குதல், புகைபிடித்தல், புகையிலை உபயோகித்தல், கள் குடித்தல், சுரங்கவேலை, புகையுடன் கூடிய விளக்கை வைத்துக் கொண்டு காரியம் செய்தல், மரம் விறகு வெட்டுதல், மாமிசம் உட்கொள்ளல், முதலானவை மிக நெருங்கிய காரணங்களாகும். மேற்கூறப்பட்ட காரியங்களால் அப்பொருள்களில் உள்ள சில ரஸபாகம் உடலில் பிரவேசித்து செல்களுடன் சேர்ந்துவிடும். இவ்வாறு ரஸங்களுடன் சேர்ந்த இரண்டு அல்லது மூன்று செல்கள் ஓர்விதப்புதுமையான சேர்க்கையைப் பெற்று நுட்பமான கிரந்தியை உண்டுபண்ணுகின்றது. அது சிறிய காலத்திற்குப் பிறகு வல்மீகார்புதங்கள் ஏற்படக் காரணமாகின்றது எனக் கருதுகின்றனர்.

செல்களைப்பற்றிக் கூறுமிடத்து பிருஹத் சாரீரம் என்னும் நூல் பின்வருமாறு கூறுகிறது. :—

கண்ணிற்குப் புலப்படாமல் உயிருள்ள உருண்டை முதலான பல உருவங்களைப் பெற்ற ஒரு பொருளே செல் எனப்படுவது. இந்த செல்களால் தான் வீட்டிற்கு செங்கற்கள் , உதவுவது போன்று உடல் கட்டப்பட்டுள்ளது. இந்நிலையைக் கண்டுதான் தர்க்க சாஸ்திரத்தில் கூறப்படும் பரமாணு காரணவாதம் ஏற்றுக் கொள்ள வேண்டியதாக ஆகிறது. இந்த செல்களை நுட்பப் பொருள்களைக் காண உபயோகிக்கப்படும் கண்ணுடி மூலம் (மைக்ரஸ் கோப்) காணலாம். இந்த செல்கள் ஒன்றுக்கொன்று மோதி அர்புதங்கள் ஏற்படுகின்றன. நாக்கு, பல், உதடு, இவைகளின் அடிபாகத்தில் புகையிலை முதலான அபத்யப் பொருள்களை உபயோகித்து அதனுல் செல்களில் மோதல்

ஏற்படுவதன் காரணமாக அந்த இடங்களில் அதிகமாக அற்புதங்கள் ஏற்படுகின்றன, என வைரஸ் (Virus) என்ற ஜீவாணு விசேஷமும் நோய்க்கு காரணம் என்று ஊகிக்கின்றனர்.

இம்மாதிரியாக அந்தந்த தேசங்களிலும் காலத்திலும் உடல்களில் அபத்யம் என்ற தவருன வழியில் புகுந்து அர்புதம் முதலான கொடூரமான நோய்களின் உருவத்தைப் பெறுகின்றன என்று கூறுவதில் நமக்கு ஓர்வித ஆட்சேபமும் கிடையாது. ஆனல் இது இம்மாதிரிதான் இருக்கும் என திட்டமிட்டு கூற இயலாத நிலையில் இருக்கும் மேல் நாட்டவர்களால் இந்த நோய் விஷயத்தில் அறுதியாக ஒன்றும் கூற இயலாது. நம் நாட்டு மகரிஷிகளோ தோஷங்கள் அதற்கான காரணங்கள் இவைகளைக் கூறுமிடத்து மாம்சார்புதங்களுக்குக் காரணம் மாமிசங்களை அதிகமாக உட்கொள்வதாகும் எனக்கூறியுள்ளனர். அதை நாம் மறுக்கமுடியாதது மட்டுமல்ல, கண்டிப்பாக நம்மால் ஏற்றுக் கொள்ளப்படவேண்டியது தான் என்பது என் துணிபு.

டாக்டர் ராபர்ட் மெர்கரிஸன் என்ற ஆங்கில வைத்யர் இந்த நோயைப்பற்றிக் கூறும்போது இந்நோய் மாம்ஸத்தை அதிகமாக உபயோகிப்பவர்களுக்கே அதிகமாக ஏற்படுவதாயும் காய்கறிகளை அதிகமாக உட்கொள்பவர்களுக்கு அதிகமாக உண்டாவதில்லை என்றும் தன் அனுபவத்தில் தெரிந்து கொண்டதாகக் கூறியுள்ளார். பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு தோலிலும் மாமிசத்திலும் தான் சஸ்திர சிகித்ஸை செய்துள்ளதாகவும் அவர்களில் ஒருவருக்குக்கூட இந்த cancer ரோகம் இல்லை என்றும் கூறுகிருர். புகை பிடிப்பதால் சுவாஸாசயத்திலும், புகையிலையை உபயோகிப்பதால் வாயிலும் அக்னிதாபத்தால் வயிற்றிலும் புற்றுநோய் ஏற்படுகிறது என்று அவர் தீர்மானத்துக்கு வந்துள்ளார். பொதுவாக இப்படிப்பட்ட பயங்கரமான நோய்களுக்கு அவரவர்களின் மிகக்கடுமையான பாபமே காரணம் என்று நாம் ஆரம்பத்தில் கூறியதை மறக்கலாகாது.

நல்ல ஆசாரம் இல்லாமல் துராசாரம் தீயச்செயல்கள் நிரம்பிய தேசங்களிலும் காலத்திலும் போக்கமுடியாத துன்பம், பயம் இவைகளைத்தரும் நோய்கள் ஏற்பட்டு ஜனங்கள் கஷ்டப்படுகின்றனர் என்பது வேதத்தில் நம்பிக்கை உள்ளவர்களின் தீர்மானம்.

நம் ஆசாரியர் தோஷ தூஷ்யங்களை நன்கு விபாகம் செய்து காட்டியுள்ளார். **"வாதாதய: மாம்ச மஸ்ருக் ப்ரதுஷ்டாஸ் ஸந்தூஷ்ய மேதச்ச ததா ஸிராச்ச"**, என்பது அவருடைய வாக்கு!

இங்கு கிரந்தி விபாகத்தை "தோஷாஸ்ர மாம்ச மேதோஸ்தி ஸிராவ் ரணபவா நவ" என்றும் "......மேதோந்தை: ஷோடா தோஷாதிபிஸ்து தத்", என்று அர்புத விபாகத்தையும் "மேதோனில கபை: கிரந்தி:", என்று சர்க்கரார்புதத்தையும் "ஸமஸ்தஜ:" என்று வல்மீகத்தையும் பிரிவு செய்து இருப்பதை சாஸ்திரங்களில் காணலாம். "வல்மீகோஸௌ ஸமஸ்தஜ:" என்று கூறுவதிலிருந்து வல்மீகம் ஸந்நிபாதத்தினின்றும் உண்டாவதாகும் என்று நன்கு தெரிகிறது. இவைகளில் ஒவ்வொன்றைப்பற்றியும் தனித்தனியாக நாம் தெரிந்து கொள்ள வேண்டுமானுல் அஷ்டாங்க சங்கிரகம் என்ற நூலை இந்த ப்ரகரணத்தில் படித்தால் போதும் என்று வாசகர்களுக்கு ஞாபகப்படுத்திவிட்டு, இங்கு அதை விவரித்தால் வியாசம் பெருகும் எனக்கருதி இத்துடன் வாசகர்கள் பொறுப்பில் அதை விட்டுவிடுகிரேம். "நாநாவர்ணம் த தோ மலா:" என்ற சொல்லைப் பிரமாணமாக்கொண்டு சர்க்கரார்புதமும் ஸந்நிபாதத்தால் உண்டாகும் என்று கேரளி வ்யாக்யானம் இங்கு விளக்கம் கூறுகிறது.

இந் நோய்க்கான ஸ்தானங்கள் :—

இந்நோய் காணப்படும் ஸ்தானங்களைப்பற்றி சாஸ்திரங்களில் நன்கு கூறப்பட்டுள்ள போதிலும் தற்கால மேலை நாட்டு வைத்ய முறையையும் அனுசரித்து இங்கு சிறிது விவரிப்போம்.

நமது நாட்டு நூல்களில் வல்மீகத்தைப்பற்றிக் கூறுமிடத்து "க்ரீவாம்சககக்ஷா கரபாததேசே சந்தௌ களே வா" என்று கூறப்பட்டிருக்கிறது. கழுத்து, தோள், அக்குள், கை, கால், மூட்டுக்கள், என்பது இதன் பொருளாகும். சர்க்கரார்புதத்திற்கு விசேஷமாக தசைநார், மாமிசம், சிரைகள் என்று கூறப்பட்டுள்ளது மர்மஸ்தனங்கள், கண்டம், வயிறு, இவைகளில் வந்தால் அந்நோய் அசாத்யமானது என்றும் கூறியுள்ளனர். இவைகளிலிருந்து உடலில் பல பாகங்களிலும் உள்ளும் புரமும் தோஷம் தூஷ்யம் இவைகளின் சேர்க்கையை பொருத்து இந் நோய் ஏற்படுகிறது என்று நாம் அறியலாம்.

உபதம்சத்தில் கூறியுள்ளதை இங்கு சிறிது கூறுவோம்.

" அங்குரைரிவ ஸஞ் ஜாதை :
உபர்யுபரிஸம்ஸ்தி தை : |
க்ரமேண ஜாய தே வர்தி :
தாம்ரசூடசி கோபமா || "

சேவலின் தலையில் உள்ள கொண்டை போன்று ஒன்று மேல் மற்றொன்றாக பல முனைகள் போன்ற தோற்றம் கொண்ட மாம்சம் உண்டாகும். குஹ்ய பிரதேசத்தில் விசஷேமாக ரக்தார்புதம், மாம்சார்புதம், ஏற்படும். உடலின் உட்புறம் வித்ரதி ஸ்தானங்களில் புதர் போன்று உருவம் உள்ளதாகும். புற்றுபோல் உயரம் உள்ளது.

" குதே பஸ்திமுகே நாப்யாம் குக்ஷௌ வங்க்ஷண
யோஸ்ததா |
வ்ருக்க யோ : ப்லீஹ்னி யக்ருதி க்லோம்னி
வாப்யதவா ஹ்ருதி " ||

மூத்ர கோசங்கள், பஸ்திமுகம், தொப்புள், வயிறு, இரண்டு துடைகளும் சேருமிடங்கள், மண்ணீரல், கல்லீரல், புப்புஸம், ஹ்ருதயம், என்பது இதன் பொருள்.

ஆரம்பத்திலேயே அர்புதம், வல்மீகம், இவைகளின் உருவத்தையோ, அல்லது வித்ரதி, கிரந்தி உருவத்தில் ஆரம்பித்து அர்புதம் வல்மீகம் உருவத்தையோ பெறுகின்றது. ஸ்தன வித்ரதி போன்று வல்மீகம் இருக்கும். ரக்தார்புதம் என்றால் ரக்தத்தில் தோஷம் சேர்வதால் ரக்தம் வெண்மை நிறத்தைப்பெறும். இதையே தற்காலத்தில் கான்ஸர் ஆப் பிளட் (Cancer of blood) எனக்கூறுகின்றனர். சிறங்காக இல்லாவிடினும் அர்புதத்தின் அணுக்கள் ரக்தத்தில் சஞ்சரிப்பதால் ரக்தார்புதம் என்ற சொல்லை காரணப் பெயர் என்றே கருதவேண்டும். மாம்சார்புதம் நன்கு நிருபிக்கப்பட்டுள்ளது. ஒரு அர்புதத்தின் மேல் மற்றொரு அர்புதம் (அத்யர்புதம்) த்விரர்புதம் (அர்புதத்திற்கு பக்கத்தில் மற்றொரு அர்புதம்) இவைகளைப்பற்றியும் சாஸ்திரங்களில் நன்கு விவரித்து உள்ளனர். வாத ரக்தப்ரகரணத்தில் வாத ரக்தத்தைப் பற்றிக் கூறும்போது அர்புதத்தை உண்டுபண்ணும் என்று கூறுவதால் வாத ரக்த ரோகிகளும் இந்த அர்புத நோய்க்கு ஆளாகக்கூடியவர்களே.

பாகம் உண்டா ?

" தோஷஸ்திரத்வாத் க்ரதனுச்ச தே ஷாம் பாகாபாவ, "

அதாவது தோஷம் நிலையாக இருப்பதாலும் தோஷங்கள் பின்னிக் கிடப்பதாலும் அவைகளுக்கு பாகம் கிடையாது. அதாவது இந்தக் கட்டி பழுத்து உடைவது என்பது இல்லை. இது விஷயமாக சாஸ்திரங்களில் பல்வேறு கருத்துக்கள் காணக்கிடக்கின்றன என்பது போல் தோன்றும்.

சரகாசார்யர் " ஸாங்குஷ்ட தண்டை : விலயேத் அபக்வம் " என்று கிரந்தி சிகித்ஸையில் கூறி அர்புத சிகித்ஸையில் கிரந்தி

சிகித்ஸையில் கூறியதை அனுஷ்டிக்க யுக்தியுடன் கூறியுள்ளார். இதனால் கிரந்தி அர்புதம் இரண்டும் ஒன்றே போல் எண்ணப்பட வேண்டியுள்ள தால் பாகம் உண்டு பாகம் இல்லை என்ற இரண்டு கட்சிகளும் சமமாகவே உள்ளதை நாம் அறியலாம்.

சுச்ருதாசாரியர் அர்புதத்திற்கு பாகம் கிடையாது என்பதை விளக்கமாக கூறியுள்ளார். அந்தப்ரகரணத்தில் டல்ஹணர் என்பவர் விளக்க முற்படும் பொழுது கிரந்தியைக் காட்டிலும் அர்புதத்தில் "மேதஸ், கபம்," அதிகமாக இருப்பதால் பாகம் இல்லாத நிலை வெகுநாட்கள் வரை நீடிக்கும் என்ற நிலை ஏற்படுகிறது என்று கூறியுள்ளார். மது கோசம் என்ற விளக்க நூல் எழுதியவர் பித்த ரக்தத்தால் ஏற்படும் அர்புதத்திற்கும் பாகம் கிடையாது என்று கூறியிருக்கிறார். ஆகவே எல்லாவித அர்புதங்களுக்கு பாகம் கிடையாது என்று அவரால் அறுதியிட்டுக் கூறப்பட்டிருக்கிறது.

இம்மாதிரி பலவகையான கருத்துக்களை ஒன்று சேர்த்து ஓர் தீர்மானத்திற்கு நாம் வரவேண்டுமானால் ஆயுர்வேதத்தை உபதேசித்த மகரிஷிகளின் மனதில் உள்ள கருத்துக்களை நன்கு அறிந்துள்ள அஷ்டாங்க ஹ்ருதயம் என்ற நூலை எழுதிய வாக்படாசாரியார்தான் நமக்கு வழிகாட்டியாக உள்ளார். அவர் கிரந்தியைப் பற்றிக் கூறுமிடத்து. "பக்வ: பூயம் ஸ்ரவேதனு". பாகம் அடைந்து சீழ் வடிக்கும் என்று கூறினர். அர்புதத்தைப் பற்றிக் கூறும்போது "ப்ராயோ மேத: கபாட்யத்வாத் ஸ்திரத்வாச்ச நபச்ய தே" பொதுவாக இந்நோயில் கபம் மேதஸ் நிரம்பி இருப்பதால், தோஷம் ஸ்திரமாக இருப்பதால் பாகம் இல்லை எனக்கூறியுள்ளார்.

இதனால் மகரிஷிகளின் வார்த்தைகளில் முன்பின் விரோதம் இல்லை என்பதை விளக்கியுள்ளார். இதனால் அர்புதத்திற்கு பாகம் கிடையாது என்பது இல்லை. ஆனாலும் ஆமாவஸ்தை வெகுநாட்கள் வரை தொடர்ந்து நீடிக்கும் என்ற கருத்து ஏற்படுகிறது. ரக்தார்புதத்தை விளக்க முற்பட்ட ஸௌச்ருத விளக்க நூலில் டல்ஹணாசாரியர் "அபாகம்" என்பதை சிறிதளவு பாகம் என்றும் "ந பாக மாயாந்தி" என்பதை பாகம் இல்லாத நிலை பல நாட்கள் நீடிக்கும் என்று விவரித்துள்ளார். வாக்படரும் ரக்தார்புதத்தில் "பாசயேச்ச ததா ஆநத்தம்" கட்டியைப் பாகம் செய்விக்க வேண்டும். எல்லா அர்புதங்களிலும் பாகம் இல்லை என்பதையும் கூறியுள்ளார்.

———

# மார்த்தண்ட ஆயுர்வேதிக்
# இஞ்செக்ஷன்-பேடண்ட் மருந்துகள்

20 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான வைத்யர்கள் லக்ஷக்கணக்கான நோயாளிகளிடத்தில் அனுபவம் பெற்ற நம்பிக்கைக்குந்த ஆச்சரியமான எமது தயாரிப்புகளை உபயோகித்துப் பிரசித்தியும் நம்பிக்கையும் பெறுங்கள்!

மார்த்தண்ட பார்மஸ்யூடிகல்ஸ் ஸ்தாபனம் தானே இயங்கும் பல விஞ்ஞான யந்திரங்களுடன் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டுள்ளது டிரக்ஸ் ஆக்டின் நியமப்படி நம்பிக்கைக்குந்த வைடமின் ஹார்மோன் ஆண்டிபயாடிக்ஸ் ஸல்ஃபா மருந்துகள் ஆயுர்வேதிக் இஞ்செக்ஷன்கள் தயாராகின்றன.

| | | | |
|---|---|---|---|
| ஸோமா இஞ்செக்ஷன் - ஆஸ்துமா சுவாஸத்தில் | 6×1 மி லி. | 3 | 30 |
| சூலாந்தக இஞ்செக்ஷன் - வயிறு, பூட்டு வலிகளில் | 6×1 மி. லி. | 2 | 48 |
| ஸ்ம்ருதிதா இஞ்செக்ஷன் - ஹிஸ்டீரியா வலிப்புகளில் | 6×1 மி. லி. | 5 | 50 |
| சரபுங்கா இஞ்செக்ஷன் - காமலை ஈரல் கட்டிகளில் | 6×2 மி. லி. | 3 | 00 |
| தாபீகர இஞ்செக்ஷன் - இன்ப்ளுயன்ஸா கபக்கட்டுகளில் | 6×1 மி. லி | 3 | 30 |
| ராஸோன் இஞ்செக்ஷன் - கீல்வாயு வீக்கங்களில் | 6×2 மி. லி. | 3 | 00 |
| பிரதராரி இஞ்செக்ஷன் - பிரதரம் முதலிய நோய்களில் | 6×2 மி. லி. | 3 | 00 |
| பிரவாள இஞ்செக்ஷன் - பல கால்ஷியக் குறைவு | 6×2 மி. லி. | 2 | 20 |
| புனர்ஞேல் இஞ்செக்ஷன் - மார்வலி மாரடைப்பு | 6×2 மி. லி. | 2 | 50 |
| புனர்னவா இஞ்செக்ஷன் - சிறுநீர் பெருக்கி | 6×2 மி. லி. | 3 | 00 |
| மருதாசி இஞ்செக்ஷன் - கீல்வாயு நோய்களில் | 6×2 மி லி. | 3 | 00 |
| நிடோரின் இஞ்செக்ஷன் - பிரட்டல் பிதற்றல்களில் | 6×2 மி. லி | 2 | 50 |
| க்லீபாந்தக இஞ்செக்ஷன் - நபும்ஸக, பலவீனத்தில் | 6×1 மி. லி | 6 | 90 |
| குர்சீனம் இஞ்செக்ஷன் - வயிற்றுக்கடுப்புகளில் | 6×1 மி. லி. | 6 | 00 |
| ஹிரண்ய இஞ்செக்ஷன் - ஆஸ்துமா நோயில் | 6×1 மி. லி. | 2 | 75 |
| துக்தப்ரொடீன் இஞ்செக்ஷன் - கர்ப்பாசய வீக்கத்தில் | 6×2 மி. லி. | 1 | 65 |
| ஹ்ருதயாம்ருத் இஞ்செக்ஷன் - ஹிருதய பலகீனங்களில் | 6×1 மி. லி. | 3 | 30 |
| பைராமோல் டாப்லெட் - விலா, தலை, பல்வலிகளில் | 10 டாப் | 1 | 50 |

ரூ. 25க்கு மேல் வாங்குபவர்களுக்கு 6 சதவிகிதம் கமிஷனும், ஃரீரக்கூறு படம் பெரியதொன்றும், பேராமோல் 10 டாப்லெட்களும், பாகிங் செலவும் இனம்.

MARTAND PHARMACEUTICALS,
BARAUT (UTTAR PRADESH)

# இம்காப்ஸ்


## ஆராய்ச்சியும் நிலையான வளர்ச்சியும்

இம்காப்ஸின் கடந்த 25 ஆண்டுகால வளர்ச்சி நிலையான முன்னேற்றத்தின் அறிகுறி. மருத்துவத்துறையில் இந்த நிறுவனம் 1944-ம் ஆண்டு 224 அங்கத்தினருடன் கூட்டுறவு முறையில் சிறிய அளவில் தொடங்கப்பட்டது. இன்று இம்காப்ஸின் வசதிகள் நிறைந்த ஆராய்ச்சிப் பகுதி நம்நாட்டின் மருத்துவ மூலிகைகளின் பயனைக் குறித்து இடையருத ஆராய்ச்சி புரிந்து கொண்டு வருகிறது. மேலும் மருந்துகளைத் தயாரிக்கின்ற கூடமானது நவீன யந்திரங்களைப் பெற்றமையால் உற்பத்தியை பன்மடங்கு பெருக்கி, தரமானதும், தூய்மையானதுமான மருந்துகளை விரும்பும் பல லட்சக்கணக்கான மக்களின் தேவைகளை நியாய விலையில் பூர்த்தி செய்கிறது.

தி இந்தியன் மெடிகல்
பிராக்டிஷனர்ஸ்
கோவாப்பரேட்டிவ்
பார்மஸி & ஸ்டோர்ஸ் லிட்.,

IMPCOPS அடையார், சென்னை-20

கிளை அலுவலகங்கள்:
சென்னை-2, மதுரை
தாடேபள்ளி (ஆந்திரப் பிரதேசம்),
விஜயவாடா, ஹைதராபாத், பெங்களூர்




மருந்துகள் சென்னை "காமதேனு"விலும் மற்றும் பிரபலமான மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

VAIDYA CHANDRIKA FEBRUARY 1970 Regd. No. M. 1048

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினல்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எங்கிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma, Published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2 Printed at Githa Press. Tiruchirapalli-2.